**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 08.07.2025**

**முன்னிலை**

# திரு முகம்மது ஷகீல் அ‌ஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 3839/SCIC/2023

திரு.ஜெ.ஹரிதாஸ் த/பெ. ஜெயராமன் மனுதாரர்
எண்.25, கன்னியம்மன் கோவில் தெரு
கீழக்கோட்டையூர் கிராமம்,
மேலக்கோட்டையூர் போஸ்ட்
சென்னை - 600 127.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
வண்டலூர்

**ஆணை**

1.இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 25/03/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **எனவே, மேற்குறிப்பிட்ட செல்வி.இந்திரா கிறிஸ்டி மற்றும் திரு. K.பாலாஜி ஆகியோர் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற பதினைந்து வேலை தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை 08/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**
>
> **மேலும், பொதுத் தகவல் அலுவலர் 21/01/2025 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள தகவலை ஆணையம் பரிசீலனை செய்து, அதனை ஏற்கவில்லை. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மனுதாரர் கோரியவாறு பட்டாவின் உண்மைத் தன்மை குறித்த தகவலை சம்பந்தப்பட்ட தகுதி**

வாய்ந்த அதிகாரி / அதிகார அமைப்பிடம் பெற்று, அதனை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும் அன்னாரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தில் 08/05/2025 அன்று பிற்பகல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மனுதாரர், தகவல்களைப் பெற்றுத்தர வேண்டுமென்று ஆணையத்திடம் கோரியதால் மேற்குறிப்பிட்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவாறு இன்று (08/05/2025) திருமதி / செல்வி.ஷாமிளா, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு செல்வி.ந.இந்திரா கிறிஸ்டி, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்களிடமிருந்து 22/04/2025 தேதியிட்டு பெற்ற காரண விளக்கத்தை ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார்.

மேலும், திரு.கே.பாலாஜி, முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்களிடமிருந்து 05/05/2025 தேதியிட்டு பெற்ற காரண விளக்கத்தையும் பெற்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார்.

பின்னர், ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு, வட்டாட்சியர் அவர்களிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்ட பட்டாவின் உண்மைத் தன்மை குறித்த கடிதத்தினையும் ஆணையத்தின் முன் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார்.

ஆகவே, மேற்சொன்ன பட்டாவின் உண்மைத் தன்மை குறித்த கடிதத்தின் நகலை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற மூன்று தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்தில் 12/06/2025 அன்று பிற்பகல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேற்குறிப்பிட்டவாறு இன்று (12/06/2025) திருமதி / செல்வி.ஷாமிளா, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு மனுதாரருக்கு 09/05/2025 தேதியிட்டு அனுப்பிய பட்டாவின் உண்மைத்தன்மை குறித்த கடிதத்தின் நகலையும், அக்கடிதம், மனுதாரரை சென்றடைந்ததற்கான அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**2.செல்வி.ந.இந்திரா கிறிஸ்டி, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் (தற்போது) தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தாம்பரம் வட்டம் அவர்களிடமிருந்து 22/04/2025 தேதியிட்டு பெற்ற காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்தது. அதில் அவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

“இந்நேர்வில் நான் கடந்த 03/11/2022 முதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். இந்நிலையில் மனுதாரர் கடந்த திரு.ஜெ.ஹரிதாஸ் த/பெ.ஜெயராமன் என்பவரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனு கிடைக்கப் பெற்றதாக தெரிய வருகிறது. இந்நிலையில் மனுதாரரின் கோரிக்கையான கீழக்கோட்டையூர் கிராமம் பட்டா எண்.484-ன் உண்மைத் தன்மை சானறினை ஆய்வு செய்து அதன் நகலினை சான்றொப்பமிட்டு வழங்குமாறு கோரப்பட்ட

மேற்படி மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு த.அ.உ.ச.மனு எண்.118/2023/அ3 நாள் 31/08/2023-ன்படி மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனை மனுதாரர் நேரில் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டதற்கான சான்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரரான திரு.ஜெ.ஹரிதாஸ் த/பெ.ஜெயராமன் என்பவரின் 21/04/2023 நாளிட்ட மனு, மனுதாரரின் மற்றொரு மனுவுடன் தவறுதலாக இணைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் மேற்படி தவறு கண்டறியப்பட்டு மனுதாரர் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு கடந்த 05/09/2023 அன்று தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி மனுதாரர் எவ்வித பொது நலனும் இல்லாமல் அதிக அளவில் மனுக்கள் அளிக்கும் நபராவார். இருப்பினும் மனுதாரருக்கு தகவல் வழங்கும் நோக்கத்துடன் தகவல் வழங்கப்பட்டுள்ளது. எனினும், மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காமைக்கு வருத்தம் தெரிவிப்பதோடு இனி வரும் காலங்களில் இது போன்ற தவறுகள் ஏதும் நிகழா வண்ணம் மனுதாரர்களுக்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்கிறேன். எனவே, இந்நேர்வு தொடர்பாக உரிய காலத்தில் தகவல் வழங்காமைக்கு மன்னித்தருளி தகவல் அறியும் உரிமை சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் தண்டம் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை விதிப்பிலிருந்து விலக்கு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

3. **செல்வி.ந.இந்திரா கிறிஸ்டி, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் (தற்போது) தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தாம்பரம் வட்டம் அவர்களின் காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. அன்னாரின் மீதான ஆணையத்தின் மேல்நடவடிக்கை கைவிடப்படுகிறது.**

4. **திரு.கே.பாலாஜி, முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்களிடமிருந்து 05/05/2025 தேதியிட்டு பெற்ற காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்தது. அதில் அவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"இந்நேர்வில் நான் கடந்த 22/06/2022 முதல் 18/06/2023 வரை மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் வண்டலூர் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். இந்நிலையில் மனுதாரர் திரு.ஜெ.ஹரிதாஸ் த/பெ.ஜெயராமன் என்பவரின் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005, மனுவில் கோரப்பட்ட மனுதாரரின் கோரிக்கையான கீழக்கோட்டையூர் கிராமம் பட்டா எண்.484-ன் உண்மைத்தன்மை சான்றினை ஆய்வு செய்து அதன் நகலினை சான்றொப்பமிட்டு வழங்குமாறு கோரப்பட்டதன் பேரில் முதல் மேல்முறையீட்டு அலுவலரின் த.அ.உ.ச.மனு எண்.118/2023/அ3 நாள் 31/08/2023-ன்படி மனுதாரருக்கு முன்னாள் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனை மனுதாரர் 05/09/2023 அன்று நேரில் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டுள்ளார். அதன் நகலினை இத்துடன் இணைத்துள்ளேன்.

மேலும், மனுதாரரான திரு.ஜெ.ஹரிதாஸ் த/பெ. ஜெயராமன் என்பவரின் மனு கிடைக்கப்பெற்ற காலத்தில் வண்டலூர் வட்டத்தில் வருவாய் தீர்வாயம் தொடர்பான முன்னேற்பாடுகம் தொடர்பான பணிகள் நடைபெற்று வந்த காரணத்தினாலும், நிலங்கள் தொடர்பாக புலத்தணிக்கை மேற்கொள்வது, பல்வேறு நீதிமன்ற வழக்குகள் குறித்து அவ்வப்போது நீதிமன்றம் சென்று வந்ததாலும், பல்வேறு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாலும், அரசு நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு அரசு நிலங்களை சுற்றி அரசு நிதியில் கம்பி வேலிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டதாலும், பொதுமக்களின் அனைத்து சான்றுகளையும்

உடனுக்குடன் கிடைக்கும் பொருட்டு தொடர்ந்து கண்காணித்து ஆன்லைன் மூலம் அனைத்து சான்றுகளும் உடனுக்குடன் பொது மக்களுக்கு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு சட்ட ஒழுங்கு, நீதிமன்ற வழக்குகளுடன் அலுவலக பணிகளையும் ஒருசேர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாலும், அதிக பணிச்சுமை ஏற்பட்டது. இருப்பினும், மனுதாரர் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு கடந்த 05/09/2023 அன்று நேரில் தகவல் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனது பணிக்காலங்களில் முன்னதாக இவ்வாறான தவறுதலோ / விடுபாடுகளோ இன்றி பணிபுரிந்து வந்துள்ளேன். இந்த மனு தொடர்பாக முன்னதாக எனக்கு தெரியாத நேர்வில் உரிய காலத்தில் பதிலளிக்க இயலாத நிலை ஏற்பட்டது என்பதனை எண்ணி வருந்துகிறேன். இனி வரும் காலங்களில் இவ்வாறான எவ்வித பணிப்பிறழ்வுகள் ஏற்படாதவாறு பணிபுரிவேன் என உறுதி கூறுகிறேன். எனவே மாண்பமைந்த தமிழ்நாடு தகவல் ஆணையமானது எனது மேற்படி விளக்கத்தினை ஏற்று என் மீதான நடவடிக்கையினை கைவிட வேண்டி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

5. **திரு.கே.பாலாஜி, முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்களின் காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்ததில் அதனை ஏற்கவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்படி, மேல்முறையீட்டு அலுவலர், மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய காலவரம்பிற்குள் தகவல் வழங்குவதென்பது தலையாய கடமைகளில் ஒன்றாகும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள், இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாத காலத்திற்குள் மேற்சொன்ன திரு. கே.பாலாஜி, முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் / வட்டாட்சியர், அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுப்பதோடு, அன்னார் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 3839/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2. பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
வண்டலூர்,

3. திரு.K.பாலாஜி
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
வட்டாட்சியர்,
வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம். (தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

4.செல்வி.இந்திரா கிறிஸ்டி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம். (தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

**மனுதாரர்**
திரு.ஜெ.ஹரிதாஸ் த/பெ. ஜெயராமன்
எண்.25, கன்னியம்மன் கோவில் தெரு
கீழக்கோட்டையூர் கிராமம்,
மேலக்கோட்டையூர் போஸ்ட்
சென்னை - 600 127.

நகல்
பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035 (for follow up)

RG/PC